# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2024.08.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தம்)

***1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 60.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துகின்றதென்பதுடன் அத்தகைய திருத்தமானது வாசகம் 16 இனாலான பாகம் II அ வினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும். அத்துடன் திருத்தப்பட்ட வாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வசுவண்டி சேவைகளுக்கு மட்டுமல்லாமல் அனைத்து போக்குவரத்து சேவைகளுக்கும் அவற்றினது பணிகளின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதற்கானது மாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் வீதிப் போக்குவரத்து சேவைகளின் நியதிகளின்படி சட்டத்தின் நோக்கெல்லையை குறித்துரைப்பதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையை திருத்துகின்ற தென்பதுடன் வீதிப் போக்குவரத்தை முன்னேற்றுவதற்கான நியமங்களையும் கட்டளைக்கற்களையும் ஏற்பாடுசெய்கின்றது.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 1அ என்னும் புதிய பிரிவு ஒன்றை உட்புகுத்துகின்றது. அப்புதிய பிரிவானது வழங்கப்பட்ட சேவைகள், பேணப்படவேண்டிய நியதிகள் மற்றும் விதிக்கப்பட வேண்டிய தண்டனை விளைவாந்தன்மைகள் தொடர்பிலும் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏற்பாடு செய்கின்றது.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பொதுமக்கள் போக்குவரத்தின் தற்போதைய தேவைப்பாடுகளை விளித்துரைத்து ஆணைக்குழுவின் பணிகளின் பரப்பெல்லையை விரிவாக்குவதற்கும் அத்துடன் வழங்கப்பட்ட சேவைகளைத் தரமுயர்த்துவதற்காக ஏற்பாடுசெய்வ தற்கானதுமாகும்.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்ப துடன் வாசகம் 16 இனால் புதிய பாகம் 11 அ வினை உட்புகுத்துவதற்கான விளைவாந்தன்மை யினவாகும்.*

***வாசகம் 7 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் வாசகம் 16 இன்மூலம் புதிய பாகம் 11 அ வினை உட்புகுத்துவதற்கான விளைவாந் தன்மையினதுமாகும்.*

***வாசகம் 8 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-*

*(1) பயண சேவை அனுமதிப்பத்திரம் தொடர்பான கருமங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் முடிபுக்கு எதிராக ஆணைக்குழுவிற்கான மேன்முறையீட்டுக் காலப்பகுதியை அதிகரிப்பதற்குமாகும்; அத்துடன்*

*(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பை பதிலீடுசெய்வதற்குமாகும்.*

***வாசகம் 9 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஆணைக்குழுவின் முடிபுக்கு எதிராக மேன்முறையீட்டுக் காலப்பகுதி ஒன்றை அதிகரிப்பதற்குமானதாகும்.*

***வாசகம் 10 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவினை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பயணச்சேவை அனுமதிப் பத்திரங் களை வழங்குவதற்காக சிறந்த மதிப்பீட்டுக் கட்டளைக்கல்லுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமானதாகும்.*

**வாசகம் 11** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 24அ என்னும் புதிய பிரிவு ஒன்றை உட்புகுத்துகின்றது. அப்புதிய பிரிவானது தற்காலிக அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதற்காக ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 12** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குறைந்தபட்ச நியமங்களுடன் இணங்குவதற்கு ஏற்பாடுசெய்வதற்காகும் என்பதுடன் பயணிகளின் காப்பு மற்றும் வசதியை உறுதிப்படுத்துவதற்கானதுமாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவினை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வசுவண்டியின் உடைமை கைமாற்றப்படுகின்றபோது பயணச்சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றின் கைமாற்றத்திற்கு ஏற்பாடு செய்வதற்குமானதாகும்.

**வாசகம் 14** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது எந்த மேலதிக நிபந்தனைகளுக்கு அமைய அனுமதிப்பத்திரமானது இப்பிரிவின்கீழ் புதுப்பிக்கப்படுகின்றதோ அந்த மேலதிக நிபந்தனைகளுக்கு அமைய சேர்ப்பதற்குமானதாகும்.

**வாசகம் 15** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பயணச்சேவை அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு மறுக்கின்ற, அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்கின்ற, பயணச்சேவை அனுமதிப்பத்திரத்தினை இல்லாதாக்குகின்ற அல்லது எந்த நிபந்தனைகளுக்கு அமைய அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்படுகின்றதோ அந்த நிபந்தனைகளை விதிக்கின்ற ஆணைக்குழுவின் முடிபுக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யும் காலப்பகுதியை அதிகரிப்பதற்குமாகும் என்பதுடன் அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு பதிலீடு செய்வதற்குமானதாகும்.

**வாசகம் 16** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான புதிய பாகம் ஒன்றை (பாகம் 11அ) உட்புகுத்துகின்றது. இப்புதிய பாகம் மாகாணங்களுக்கிடையிலான வசுவண்டி சேவைகள் தவிர, மாகாணங்களுக்கிடையில் தொழிற்படும் போக்குவரத்து சேவையை ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்பாடுசெய்கின்றதென்பதுடன் புதிய புரிவு 34அ (போக்குவரத்து சேவைகளின் வெளிப்படுத்துகையும் பதிவுசெய்தலும்), பிரிவு 34ஆ (போக்குவரத்து சேவைகளை வகுதிப்படுத்துதலும் மற்றும் சான்றிதழை வழங்குதலும்), பிரிவு 34இ (வளிக்காப்புத்தட்டியில் காட்சிப்படுத்தப்படவேண்டிய சான்றிதழ்) மற்றும் பிரிவு 34ஈ (சட்டத்தின் பாகம் IIஅ கீழான மேன்முறையீடுகள்) என்பவற்றை உள்ளடக்கு வதற்குமானதாகும்.

**வாசகம் 17** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது நீதிமன்றம் ஒன்றினால், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது நீதிவான் ஒருவரினால் பணிக்கப்பட்ட தொகையினை நிதியத்திற்கு செலுத்துவதற்கு வசதியளிப்பதற்கானதுமாகும்.

**வாசகம் 18** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவினைத் திருத்துகின்ற தென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஆணைக்குழுவின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கானதாகும்.

**வாசகம் 19** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 38அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது. அப் புதிய பிரிவானது போக்குவரத்து சேவை கட்டணங்களை கணிப்பீடு செய்வதற்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 20 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது. 38ஆ என்னும் அப் புதிய பிரிவானது வசுவண்டி சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் என்பவற்றை கண்காணிப்பதற்கு ஆணைக்குழுவை தேவைப்படுத்துகின்றது என்பதுடன் பிரிவு 38இ பயிற்சி நிலையம் ஒன்றினை தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்கின்றது; அத்துடன் பிரிவு 38ஈ நடத்தைக் கோவையை ஏற்பாடு செய்கின்றது.

**வாசகம் 21 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவினை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படவேண்டிய பணிப்புகளை மற்றும் அத்தகைய பணிப்புகள் தொடர்பான மேன்முறையீட்டுக்கான நடவடிக்கைமுறை என்பவற்றை இயலச்செய்கின்றது.

**வாசகம் 22 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 39அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது. அப்புதிய பிரிவானது தண்டங்களை சேகரிப்பதற்கு ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 23 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குறைந்தபட்ச குற்றப்பணத்தை அதிகரிப்பதற்கும், குறைந்தபட்ச குற்றப்பணத்தை விதிப்பதற்கும் அத்துடன் மறியற்றண்டனைக் காலப்பகுதியை குறைப்பதற்கானதுமாகும்.

**வாசகம் 24 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது எந்த கருமங்களுக்கு ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாமோ அந்த கருமங்களை அதிகரிப்பதற்கானதுமாகும்.

**வாசகம் 25 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஏ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பயணச் சேவை அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான தகைமைக்கென குறித்தசில மார்க்கங்களுக்கான முன்னேற்றப் பட்ட வசதிகளை ஏற்பாடுசெய்வதற்கானதுமாகும்.

**வாசகம் 26 :** இவ்வாசகம் "விதித்துரைக்கப்பட்ட", "மாகாணம்", "மாகாண சபை", "போக்குவரத்துக் கட்டணங்கள்", "போக்குவரத்துச் சேவைகள்", "போக்குவரத்து வாகனம்" அத்துடன் "வாகனம்" என்பவற்றுக்கான புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும் அத்துடன் "குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பு" என்னும் வரைவிலக்கணத்தை திருத்துவதன்மூலமும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை திருத்துகின்றது.

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**
**(திருத்தம்)**

*ச.வ.- ஓ. 9/2021*

***1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்*

***2.*** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் விரிவுப் பெயரானது, "வசுவண்டி மூலம் பயணப் போக்குவரத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வீதிப் போக்குவரத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையைத் திருத்துதல்*

***3.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியில், "வசுவண்டி சேவைகளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாகாணங்களுக்கிடையிலான வசுவண்டி சேவைகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (அ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(அஅ) அமைச்சரினால் வெளிப்படுத்தப்படக் கூடியவாறான வசுவண்டி சேவைகள், அலுவலக போக்குவரத்து சேவைகள், பாடசாலைப் போக்குவரத்து சேவைகள், முச்சக்கரவண்டிச் சேவைகள் மற்றும் வேறு ஏதேனும் மாகாணங்களுக்கிடையிலான வீதிப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கிடையிலான வீதிப் போக்குவரத்துச் சேவைகளுக்கு வசதியளித்தல்;";

(3) அதன் (ஆ) என்னும் பந்தியில் "வசுவண்டி மூலம் பயணப் போக்குவரத்துத்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வீதிப் போக்குவரத்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அதன் (ஈ) என்னும் பந்தியில், "அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்பவர்களிடையே" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் "போக்குவரத்து முறை ஒவ்வொன்றிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(5) அதன் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(உ) பாதுகாப்பானதும் வசதியானதுமான வீதிப் போக்குவரத்தை உறுதிப்படுத்தல்; அத்துடன்

(ஊ) வீதிப்போக்குவரத்தை முன்னேற்றுவதற்கு ஏற்புடையற்பாலதான நியமங்களையும் கட்டளைக்கற்களையும் தீர்மானித்தல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 1அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்படுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 1அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

"சட்டத்தின் குறிக்கோள்கள்

*1அ. சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவன வாதல் வேண்டும் -*

*(அ) மாகாணங்களுக்கிடையிலான வசுவண்டி சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகளுக்கு வசதியளித்தல்;*

*(ஆ) வசுவண்டி சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகளைக் கண்காணித்தல் மற்றும் அத்தகைய சேவைகளுக்கு ஏற்புடையற்பாலதான நியமங்கள் போக்குவரத்து சேவை வழங்குனர்களினால் நிறைவேற்றப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்; அத்துடன்*

*(இ) அந்தந்த போக்குவரத்து சேவை வழங்குனர்களினால் புரியப்படக்கூடியதான தவறுகள் மற்றும் அத்தகைய தவறுகளுக்காக ஆணைக்குழுவினால் விதிக்கப் படக்கூடியதான தண்டனை பற்றிய தடைகள் என்பவற்றை விதித்தல்.".*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**5.** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*(1) "வசுவண்டி மூலம் பயணப் போக்குவரத்துச் சேவை தொடர்பிலான தேசிய கொள்கை மீது அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வீதிப் போக்குவரத்து தொடர்பிலான தேசிய கொள்கை மீது அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும்"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்*

(2) அதன் (ஐ) எனும் பந்தியில், "குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பில் மற்றும் வசுவண்டி சேவைகள் தவிர்ந்த, போக்குவரத்து சேவைகளுக்கான போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்;";

(3) அதன் (ஓ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(ஓ) வசுவண்டி சேவைகளையும், போக்குவரத்து சேவைகளையும் வழங்குவதற்காக எவரேனும் ஆளுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல் அத்துடன் அதனது பயணச் சேவை அனுமதிப் பத்திரங்களையும் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரங்களையும் வழங்குதல்;";

(4) அதன் (க) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(க) வசுவண்டி சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் மூலம் மாகாணங்களுக்கிடையிலான பண்டங்கள் போக்குவரத்தை ஒழுங்கேற்பாடு செய்தல்;"; அத்துடன்

(5) அதன் (க) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை சேர்ப்பதன் மூலமும்:-

"(ங) தேசிய மட்டத்தில் வீதிப்போக்குவரத்து வழிகாட்டுநெறி ஒன்றை வகுத்தமைத்தல்;

(ச) இயைபான அக்கறை கொண்டுள்ளோர்களின் எழுத்திலான முறையீடுகளைக் கவனத்திற்கெடுத்த பின்னர் போக்குவரத்து கட்டணத்தை விதிப்பதற்கான

சூத்திரம் ஒன்றை தீர்மானித்தல் மற்றும் வீதிப்போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கையை பருவகாலரீதியாக மதிப்பீடு செய்தல் அத்துடன் அவசியமான போது அத்தகைய சூத்திரத்தை மீட்டல்;

(ஞ) போக்குவரத்து முறைமையை தரமுயர்த்துவதற்கான நவீன தொழில் நுட்பவியல்சார் முறைமைகளை பயன் படுத்துதலை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்;

(ட) போக்குவரத்து சேவைகள் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலுக்கு வசதியளித்தல்;

(ண) போக்குவரத்து சேவைகளுக்காக தேசிய தரவுத்தளம் ஒன்றை பேணுதல் மற்றும் போக்குவரத்து சேவை வழங்குனர்களி னால் வழங்கப்பட்ட சேவைகளைக் கண் காணித்தல்;

(த) போக்குவரத்து சேவை வழங்குனர்களை பயிற்றுவிப்பதற்கு பயிற்சி நிலையம் ஒன்றைத் தாபித்தல்;

(ந) இச்சட்டத்தின் கீழ் எவ்வாளுக்கு அனு மதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அல்லது புதுப்பிக்கப்பட்டுள்ளதோ அவ்வாளிற்கு பணிப்புகளை வழங்குதல்;

(ப) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக் குழுவின் செயற்பாடுகளில் உதவுவதற்கு உபகுழுக்களை நியமித்தல்;

(ம) ஆண்டுதோறும் வீதிப் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கையை

மீளாய்வு செய்தல் மற்றும் அத்தகைய கொள்கை தொடர்பான சட்ட, நிருவாக அல்லது வேறு கருமங்கள் பற்றி அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல்;

(ய) இயைபான அமைச்சுக்கள், மாகாணசபை கள், உள்ளூர் அதிகாரசபைகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், பகிரங்க மற்றும் தனியார்துறை ஒழுங்கமைப்புகள் என்பவற்றை கலந்தாலோசித்தல் மற்றும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கத் திற்காகவும் பயணிகளின் நலனைப் பாதுகாப்பதற்கும் காப்பு அளிப் பதற்குமான போக்குவரத்து சேவைகளை தரமுயர்த்துவதற்காகவும் அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய வழி முறைகளை விதந்துரைத்தல்;

(ர) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் எவையேனும் மீறுகை தொடர்பாக பொதுமக்களிடமிருந்து முறைப் பாடுகளை பெற்றுக்கொள்ளுதல்; அத்து டன்

(ல) எவரேனும் விண்ணப்பகாரரின் பயணி யின், அனுமதிப்பத்திரம் ஒன்றை அல்லது சான்றிதழை வைத்திருப்பவரின் வசதிக்கு அல்லது சட்டத்தின் வினைத்திறன்மிக்க நிருவாகத்திற்கு அவசியமாக இருக்கக் கூடியவாறான 44 ஆம் பிரிவின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட கருமங்களிற்கான பரந்தளவிலான பிரபல்யத்தை கொடுத் தல்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது அதன் (ஏ) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(ஏ) பயண போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரங்கள் மற்றும் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றை வைத்திருப்பவர்கள் வசு வண்டிச் சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் தொடர்பிலான தமது பணிகளை முறையாக நிறைவேற்றுவதை இயலச்செய்வதற்கு அவர்களுக்கு பொறியியல், தொழில்நுட்பவியல், சட்ட, மருத்துவ மற்றும் நிதியுதவிகளை வழங்குவதற்கும் அத்துடன் மதியுரையளிப்பதற்கும்; அத்துடன்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது, "ஆணைக்குழுவிற்குக் கொடுத்துதவுமாறு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக்குழுவிற்கு கொடுத்துதவுமாறு அல்லது விடயத்திற்கேற்ப போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரமொன்றை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "பதினான்கு நாட்களுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முப்பது நாட்களுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பினை இடுவதன் மூலமும்:-

"அதிகாரமளிக்கப்பட்ட
ஆள் ஒருவரின் ஏதேனும்
முடிபுக்கு எதிரான
மேன்முறையீடுகள்".

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில், "பதினான்கு நாட்களுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முப்பது நாட்களுக்குள்ளாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல*

*"பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்கு வதற்கான கட்டளைக் கற்கள்*

24.(1) பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கான விண்ணப்ப மொன்று கிடைக்கப்பெற்றதன் மேல், ஆணைக்குழு வானது பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அல்லது மறுப்பதற்கு முன்னர் பின்வரும் கட்டளைக்கற் களை கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கப்பட்ட மார்க்கம் அல்லது மார்க்கங்கள் பற்றி பொதுமக்களினால் செய்யப்பட்ட வசு வண்டி சேவைகளுக்கான கோரிக்கை;

(ஆ) தோதானதென கருதக்கூடியவாறான அத்தகயை நியதிகள் மற்றும் நிபந்தனை களுக்கு அமைய வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்கான விண்ணப் பதாரரின் ஆற்றல்;

(இ) ஏதேனும் குறித்தளிக்கப்படற்பாலதான மார்க்கம் அல்லது எவையேனும் குறித் தளிக்கப்படற்பாலதான மார்க்கங்கள் பற்றி பயணங்களைப் பொறுப்பேற்ப தற்கான வசுவண்டியின் பொருத்தமான தன்மை;

(ஈ) இச்சட்டத்திலும், ஒழுங்குவிதிகளிலும் மற்றும் வேறு எழுத்திலான சட்டத்திலும் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் வசுவண்டியைப் பராமரிப்பதற்கு நேர் முற்போந்த ஆறுமாதங்களை மேவுகின்ற வங்கிக் கூற்றொன்றின் அடிப்படையின் மீது விண்ணப்பகாரரின் நிலைத்திருக்கக்கூடிய நிதிசார் தகுதி; அத்துடன்

(உ) பண்டங்கள் அல்லது பொதிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடம் உட்பட ஓட்டுநர், நடத்துனர் மற்றும் பயணிகள் என்போருக்கு அளிக்கப்பட்ட வசதிகளின் பொருத்தமான தன்மை.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"தற்காலிக அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்குதல்*

24அ. ஆணைக்குழுவானது 18 ஆம் பிரிவிற்கமைய பண்டிகைக் காலமொன்றின் போதும் அல்லது விடுமுறை காலமொன்றின் போதும் மற்றும் ஏனைய சமூக தேவைப்பாட்டையும் கருத்திற்கொண்டும் உண்மையான பயணிகளின் கோரிக்கையையும் தேவைப்பாட்டையும் நிறைவேற்றுவதற்கென 24 ஆம் பிரிவிற்கு இணங்க தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு மார்க்கம் அல்லது மார்க்கங்கள் மீதும் மற்றும் அத்தகைய காலப்பகுதிக்காகவும் வசுவண்டியொன்றின் தொழிற்பாட்டை அதிகாரமளிப்பதற்கு தற்காலிக அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கலாம்.".

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது அதன் (இ) என்னும் பந்தியில், "எல்லா நேரங்களிலும் தகுதியானதும் சேவையிலீடுபடுத்தற்பாலதுமான ஒரு நிலைமையில் பேணப்படுதல் வேண்டும் என;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொதுமக்களின் காப்பையும் வசதியையும் உறுதிப் படுத்துவதற்காக ஆணைக்குழுவின் விதப்புரையுடன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான குறைந்தபட்ச நியமங்களுடன் இணங்கியொழுகப் பேணப்படுதல் வேண்டும் என".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகிறது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்*

"அனுமதிப் பத்திரத்தை கைமாற்றுதல்

28.(1) செல்லுபடியான பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வைத்திருப் பவர் அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் குறித் துரைக்கப்பட்ட எஞ்சிய காலப்பகுதி ஒன்றுக்கு ஆணைக்குழுவின் முன் அங்கீகாரத்துடன் அத்த கைய அனுமதிப்பத்திரத்தைக் கைமாற்றலாம். எவ்வாளுக்கு கைமாற்றம் பயன்கொடுக்கக் கூடிய தாகவுள்ளதோ அவ்வாள் விதித்துரைக்கப்படக் கூடியவாறான படிவத்திலும் முறையிலும் அத்து டன் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீதும் அனுமதிப்பத்திரம் காலாவதியாகி இருந்தாலும்சரி அல்லது இல்லாவிட்டாலுஞ்சரி வசுவண்டியின் உடமையினை பெற்றுக்கொண்டு ஒரு கிழமையி னுள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது 18 ஆம் பிரிவிற்கு அமையவும் அத்துடன் 24 ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கைமுறை மற்றும் நியதிகள் மற்ற நிபந்தனைகளுக்கு அமையவும் அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்தை

வழங்குவதற்கு அல்லது மறுப்பதற்கு முன்னர் அதன்மீது விதித்துரைக்கப்பட்ட எவையேனும் குறித்த கட்டளைக்கற்களுக்கு அமையவும் பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதற்கு அனுமதிப்பதை அல்லது மறுப்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் 40 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் "அத்தகைய அனுமதிப்பத்திரத்தை அது முடிவடையும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஓர் ஆண்டிற்கு குறையாததும் மூன்றாண்டுகளை விஞ்சாததுமான அத்தகைய காலப்பகுதிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "24, 25(1) மற்றும் 31(1) என்னும் பிரிவுகளின் கீழான ஏற்பாடுகளுக்கு அமையவும் அத்துடன் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரின் செயல் நிறைவற்றத்தைக் கருத்திற்கொண்டும் அனுமதிப் பத்திரத்தின் காலாவதியாகும் தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஓர் ஆண்டிற்கு குறையாததும் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததுமான அத்தகைய காலப்பகுதிக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) பயணப் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றின் புதுப்பித்தலுக்கான

விண்ணப்பமொன்று அனுமதிப்பத்திரம் காலாவதியாகும் தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.;";

(3) அதன் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) பந்தி (இ) இல், "அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தவில்லை என" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தவில்லை என"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டதும் மற்றும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டதுமான செயல் நிறைவேற்றுகை கட்டளைக்கற்களுக்கிணங்க திருப்திகரமாக புரியப்படவில்லை என,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவினை திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "பதினான்கு நாட்களுக்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முப்பது நாட்களுக்குள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன் மூலமும்:-

" ஆணைக்குழுவின் ஏதேனும் முடிபுக்கு எதிரான மேன்முறையீடுகள்".

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பாகம் IIஅ வினை உட்புகுத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் (பிரிவுகள் 34அ தொடக்கம் 34ஈ வரை) இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் பாகம் IIஅ வாக பயனுறுதலும் வேண்டும்:-

"பாகம் II அ

**மாகாணங்களுக்கிடையிலான வசுவண்டி சேவைகள் தவிர்ந்த மாகாணங்களுக்கிடையில் தொழிற்படுத்தப்படும் போக்குவரத்து சேவைகளை ஒழுங்குபடுத்தல்**

போக்குவரத்து சேவைகளின் வெளிப்படுத்துகையும் பதிவும்

34அ.(1) வசுவண்டி சேவைகள் தொடர்பான பாகம் II இன் தொழிற்பாடு எவ்வாறிருப்பினும், அமைச்சர், ஆணைக்குழுவின் விதப்புரையின் பேரில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் மாகாணங்களுக்கிடையில் தொழிற்படுத்தப் படக்கூடியதான பெயர்குறிப்பிடப்பட்ட போக்குவரத்து சேவைகளாக இருக்கக்கூடிய அலுவல் போக்குவரத்து சேவைகள், பாடசாலை போக்குவரத்து சேவைகள் மற்றும் முச்சக்கரவண்டி சேவைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தலாம். அமைச்சர் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கிடையில் தொழிற்படுத்தக்கூடிய சேவை முறை ஒன்றாக இருப்பதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான வேறு எவையேனும் போக்குவரத்து வழிமுறைகளை வெளிப்படுத்துவதற்கு காலத்திற்குக்காலம் ஏதேனும் கட்டளையை மாற்றலாம், திருத்தலாம் அல்லது நீக்கலாம்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய பிந்திய தேதியானது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(ஆ) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டு மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றம் முன்னர் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னரே ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) எந்தத் தேதியன்று ஏதேனும் கட்டளை அவ்வாறு இல்லாதொழிக்கப்படுவதாக கருதப்படுகின்றதோ அந்தத் தேதியன்று வர்த்தமானியில் வெளிப்படுதல் வேண்டும்.

(3) (அ) போக்குவரத்து சேவை வழங்குனர் ஒவ்வொருவரும் ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் (இதனகத்துப்பின்னர் "போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அனுமதிப்பத்திரம் ஒன்று ஆணைக்குழுவினால் அத்தகைய சேவை வழங்குனருக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) பதிவேடு ஒன்று ஒவ்வொரு போக்குவரத்து சேவைகளுக்கான ஆணைக்குழுவினால் பேணப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவானது அதன் அலுவலக வலைத்தளத்தில்

இயைபான பதிவு விபரங்களை பதிவுசெய்வதன் மூலம் தரவுத் தளத்தை ஒரே நேரத்தில் நாளது வரையாக்குதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட போக்குவரத்து சேவை வழங்குனர்களின் விபரங்கள் காலத்திற்குக் காலம் வர்த்தமானியில் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) பதிவுசெய்வதற்கான நடவடிக்கைமுறை மற்றும் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்கும் முறை ஆகியவை விதித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(4) எவரேனும் போக்குவரத்து சேவை வழங்குநர் இப்பிரிவின் நியதிகளின்படி ஆணைக் குழுவுடன் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய, (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு போக்குவரத்து சேவைகளை வழங்குதலாகாது.

(5) போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரமானது காலத்திற்கு காலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான சொல்லப்பட்ட அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் பேணப்படவேண்டிய அந்தந்த போக்குவரத்து சேவைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமையவும் அத்துடன் அத்தகைய சேவையின் நியமங்களுக்கு அமையவும் விடயத்திற்கேற்றவாறு வழங்கப்படுதல் வேண்டும் அல்லது வழங்கப்படுதலாகாது.

(6) (அ) போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரத்தை மாற்றுகின்றவரான;

(ஆ) பொய்யான ஆவணங்களை காண்பிக் கின்றவரான; அல்லது

(இ) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப் பட்டிராதுள்ள வாகனம் ஒன்றில் மூலம்

ஏதேனும் போக்குவவரத்து சேவையை வழங்குகின்றவரான,

எவரேனும் போக்குவரத்து சேவை வழங்குநர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழு, தவறுக்கான தண்டம் முழுமையாக கொடுத்துதீர்க்கும் வரையும் அத்துடன் போக்குவரத்து சேவை வழங்குனர் இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பதிவுசெய்யப்பட்டுள்ள வரையும் பொதுமக்கள் விழிப்புக்கான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அத்தகைய ஆட்களின் பெயர்களையும் விபரங்களை யும் வலைத்தளத்தில் வெளியிடுதல் வேண்டும்.

போக்குவரத்து சேவைகளை வகுதிப் படுத்தலும் சான்றிதழ் ஒன்றை வழங்குதலும்

34ஆ. (1) அமைச்சர் ஆணைக்குழுவின் மதியுரை யின்மீது போக்குவரத்து சேவைகளின் வகுப்புகளை வகுதிப்படுத்தலாம் என்பதுடன் காலத்திற்குக் காலம் அத்தகைய ஏதேனும் சேவை மூலம் பேணப் படவேண்டிய நியமங்களையும் விதித்துரைக்கலாம்.

(2) அமைச்சர் போக்குவரத்து சேவைகளின் வகுப்புகளை வகுதிப்படுத்தியுள்ளவிடத்து, ஆணைக்குழுவானது அத்தகைய வகுதிப் படுத்தலுக்கு இணங்க போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் ஒன்றினை வைத்திருப்பவருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

சான்றிதழானது வளிக்காப்பு தட்டி மீது காட்சிப்படுத்தி வைக்கப்படுதல்

34இ.(1) போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றினை வைத்திருப்பவர் அத்தகைய போக்குவரத்து வாகனத்தில் ஏறும் எவரேனும் ஆளுக்கு தெளிவாக தெரியக்கூடிய அத்தகைய முறையில் எந்த வாகனத்திற்கு அச்சான்றிதழ் தொடர்புறுத்துகின்றதோ அந்தவாகனத்தின் வளிக்காப்புத்தட்டிமீது காட்சிப்படுத்தி வைக்கப் படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மூன்றாம் திறத்தவர் ஒருவரை பிழைவழியுய்க்க செய்கின்ற அல்லது தடுமாறச் செய்கின்ற அத்தகைய முறை ஒன்றில் சான்றிதழை மிகவும் ஒத்ததான குறிப்பீடு செய்கின்ற குறிப்பீடு ஒன்றை வெளிக்காட்டிவைக்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

*சட்டத்தின் பாகம் II அ வின் கீழான மேன் முறையீடுகள்*

34ஈ.(1) இச்சட்டத்தின் பாகம் II அ வின் கீழ் ஆணைக்குழுவின் முடிபொன்றினால் இன்னலுற்றிருக்கின்றவரான எவரேனும் ஆள் அத்தகைய முடிபானது அத்தகைய இன்னலுற்ற ஆளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்ற தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தகைய முடிபுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) இச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவின் கீழான எதேனும் மேன்முறையீட்டுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ) என்னும் பந்தியில், "பணத்தொகைகள் யாவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணத் தொகைகள் யாவும்;"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் புதிய பந்தியினைப் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) நீதிமன்றம் ஒன்றினால் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ்

அல்லது நீதிவானொருவரினால் அவரது தற்றுணிபின் பேரில் அதற்கென செலுத்தப் படவேண்டும் என பணிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது, "அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அரசிய லமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் ஏற்பாடுகள்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 38 அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்

**19.** பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 38 இனை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 38அ என்னும் பிரிவாக பயனறுதலும் வேண்டும்:-

"கட்டணத்தை கணிப்பீடு செய்தல்

38அ.(1) வசுவண்டி சேவைகள் உட்பட போக்கு வரத்துச் சேவைகள் தொடர்பான போக்குவரத்துச் சேவைக் கட்டணங்கள், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும் மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் குறித்துரைக் கப்பட்டதுமான போக்குவரத்துக் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கையைப் பின்பற்றி காலத்திற்குக்காலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட சூத்திரத்திற்கு இணங்க ஆணைக்குழுவினால் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது அதன் உத்தியோக பூர்வ வலைத்தளத்தில் அந்தந்த போக்குவரத்து சேவைகள் தொடர்பான போக்குவரத்து சேவைக் கட்டணங்களின் பட்டியல்களை வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு போக்குவரத்து சேவை வழங்குனரும் அத்தகைய வலைத்தளத்தில்

வெளியிடப்பட்ட அத்தகைய பட்டியல்களுக்கு இணங்க தனது சேவைக்கு ஏற்புடையற்பாலதான போக்குவரத்து சேவைக்கட்டணங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பட்டியல் போக்குவரத்து வாகனத்தின் ஏதேனும் துலாம்பரமான இடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.

*(3)* ஆணைக்குழுவானது *39* ஆம் பிரிவின் *(2)* ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, போக்குவரத்து சேவை வழங்குனர்கள் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகிறார்களா என காலத்துக்குக்கு காலம் சோதிக்கலாம் என்பதுடன் இப்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் *40* ஆம் பிரிவின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 38ஆ, 38இ மற்றும் 38ஈ என்னும் பிரிவுகளை உட்புகுத்தல்*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் "பாகம் IV பொது" என்னும் தலையங்கத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் *38*ஆ, *38*இ மற்றும் *38*ஈ என்னும் பிரிவுகளாக பயனுறுதலும் வேண்டும்:-

"வசுவண்டி சேவைகளையும் மற்றும் போக்குவரத்து சேவைகளையும் கண்காணிப்பதற்கான ஆணைக்குழு

*38*ஆ.*(1)* ஆணைக்குழுவானது பின்வருவனவற்றுக்காக வசுவண்டி சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகளை கண்காணித்தல் வேண்டும்:-

*(அ)* இயைபான அரசாங்க முகவராண்மைகளின் உதவியுடன் காப்பான, வினைத்திறனான மற்றும் பயனுறுதிமிக்க மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தை உறுதி செய்வதற்கும் அத்து

டன் சொல்லப்பட்ட கண்காணிப்பு செயற்பாடுகளின் மற்றும் சொல்லப்பட்ட சேவை வழங்குனர்களினால் எடுக்கப் படும் எவையேனும் நிவாரண வழி முறைகள் பற்றியும் சொல்லப்பட்ட அரசாங்க முகவராண்மைகளிடமிருந்து அறிக்கைகளைக் கோருவதற்கும்; அத்து டன்

(ஆ) மத்திய சூழல் அதிகாரசபையின் உதவி யுடன் போக்குவரத்து வாகனங்களிட மிருந்தான ஒலி மாசடைதல் மற்றும் வேறு மாசுகள் என்பவற்றின் பாதிப்பை மதிப்பீடு செய்வதற்கும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் குறித்துரைக் கப்பட்ட நியமங்களைப் பின்பற்றுவதில் உதவுவதற்கும்.

(2) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நியமங்களைப் பின்பற்றி போக்குவரத்து வாக னத்தை பேணுவதற்கு தவறுகின்ற அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்ன ரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் கண்காணிப்பு செய்கின்ற முறையானது விதித் துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

*பயிற்சி நிலையம் ஒன்றைத் தாபித்தல்*

38இ. (1) ஆணைக்குழுவின் கீழ் போக்குவரத்து சேவைகளை உயர்த்துவதற்காக பயிற்சி நிலையம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். நிலையத்தின் நோக்கமானது இயந்திரவியல் திறன்கள், வீதிப் பாதுகாப்பு அவசரகால வழிமுறைகள் மற்றும் வீதி ஒழுங்குமுறை என்பவற்றில் பயிற்சி பெறும் வாய்ப்புகளை அளிப்பதன் மூலம் போக்குவரத்து சேவை வழங்குனர்களின் ஒட்டுமொத்த ஆற்றலை அதிகரித்தாதல் வேண்டும்.

(2) பதிவேடுகளை பேணுதல், அறிக்கையிடல், நிதிசார் வகைகூறவேண்டியமை மற்றும் கண் காணித்தல் உள்ளடங்கலாக நிலையத்தின் முகாமையானது விதித்துரைக்கப்பட்டவாறான முறையில் ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப் படுதல் வேண்டும்.

*நடத்தைக் கோவையை விதித்துரைப் பதற்கான அமைச்சரின் தத்துவங்கள்*

38ஈ. (1) அமைச்சர் மாகாணங்களுக்கிடை யிலான வசுவண்டி சேவைகள் தொடர்பிலும் 34அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் வழங்கப் பட்ட போக்குவரத்து சேவைகள் எல்லாவற்றினதும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றினதும் தொடர்பிலும் ஏற்புடையற்பாலதாக இருக்க வேண்டியதான நடத்தைக் கோவைகளை விதித் துரைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதிகள் ஆணைக்குழுவின் மதியுரையின் மீதும் மற்றும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்ட பின்னரும் மட்டும் ஆக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) எவரேனும் போக்குவரத்து சேவை வழங்குநர் (1) பிரிவின் நியதிகளின்படி விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் நடத்தைக் கோவை யில் தரப்பட்ட ஏதேனும் விடயத்தை மீறியுள்ள விடத்து அல்லது ஏதேனும் விடயத்துடன் இணங்கி

யொழுகத் தவறுகின்றவிடத்து அல்லது இணங்கியொழுகாமைக்கான அத்தகைய மீறுகை நியாயமாயின் சாத்தியமுள்ளவிடத்து ஆணைக்குழுவானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான நடவடிக்கைமுறைக்கிணங்க விசாரணை ஒன்றை நடாத்தலாம்.

(ஆ) ஆணைக்குழுவானது பந்தி (அ) வின் கீழான விசாரணையில் கேட்கப்படுவதற்கென சந்தர்ப்பத்தை அந்தந்த போக்குவரத்து சேவை வழங்குநருக்கு வழங்கிய பின்னர் பின்வருவனவற்றுக்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் அத்தகைய போக்குவரத்து சேவை வழங்குநருக்கு பணிப்புரை ஒன்றை வழங்கலாம் -

(i) அந்தந்த நடத்தைக் கோவையுடன் தொடர்புபட்ட செயல் அல்லது செயலொன்றைச் செய்யாது தவிர்ப்பதிலிருந்து இல்லாதொழிப்பதற்கும் மற்றும் தவிர்ப்பதற்கும்;

(ii) ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி நிலைமையை சரிசெய்வதற்கு அவசியமாக இருக்கின்றதான அத்தகைய செயல்களை நிறைவேற்றுவதற்கும்; அல்லது

(iii) பந்தி (அ) வின்கீழ் போக்குவரத்து சேவை வழங்குநர் ஒருவரால் ஏதேனும் மீறுகையின் விளைவாக தீங்கு, இழப்பு அல்லது சேதம் என்பவற்றை அனுபவித்துள்ளவரான இன்னலுற்ற ஆளுக்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான நட்டஈடாக அத்தகைய பணத்தொகைக் கொடுப்பனவொன்றைச் செய்வதற்கும்.

(இ) பந்தி (ஆ) வின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரை ஒவ்வொன்றும் எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் எப்போக்குவரத்துச் சேவை வழங்குநருக்கு பணிப்புரையானது நெறிப்படுத்தப் படுகின்றதோ போக்குவரத்துச் சேவை வழங்கு நருக்கு பதிவுத்தபால் மூலம் இலத்திரனியல் தொடர்பாடல்மூலம் அல்லது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட அதே வேறு வழிகள் மூலம் அறிவிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பணிப்புரையானது அத்தகைய போக்குவரத்து சேவை வழங்குநர்மீது பிணிக்கப் படுதல் வேண்டும். அவர் அத்தகைய அறிவித்தல் திகதியிலிருந்து அத்தகைய பணிப்புரையுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றதென்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:-

*"அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர் களுக்கான பணிப்புகளை வழங்கு வதற்கான ஆணைக் குழுவின் தத்துவம்*

39. (1) ஆணைக்குழுவானது இச்சட்டத்தின்கீழ் எவ்வாளுக்கு அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கி இருந்துள்ளதோ அல்லது புதுப்பிக்கப்பட்டு இருந்துள்ளதோ அந்த எவரேனும் ஆளுக்கு இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட்ட எதேனும் நிபந்தனையுடன் அத்தகைய ஆளை இணங்கியொழுகச் செய்கின்ற நோக்கத்திற்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகள் எவ்வாளுக்கு வழங்கப்பட்டதோ

அத்தகைய ஆள், அத்தகைய பணிப்புகளில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலத்தினுள் அத்தகைய பணிப்புகளுடன் இணங்கியொழுகுவது அவரின் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஆணைக்குழுவினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எந்த நேரத்திலும்–

(அ) ஏதேனும் போக்குவரத்து வாகனம் ஏற்புடையற்பாலதாகவிருக்கக்கூடிய அனுமதிப்பத்திரத்தினால் அல்லது புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அத்தகைய வாகனம் பயன்படுத்துகின்றதா என்பதையும், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகள் அல்லது ஏதேனும் நடத்தைக்கோவையின்கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட எவையேனும் பணிப்புகள் இணங்கியொழுகப்படுகின்றவா என்பதனையும் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதனையும் நிச்சயிப்பதற்கு ஏதேனும் போக்குவரத்து வாகனத்தினுள் பிரவேசிக்கலாம் அல்லது புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றினால் அத்தகைய வாகனத்தின் பயன்பாடு அதிகாரமளிக்கப்படுகின்றதா என அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் அல்லது (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என அல்லது இச்சட்டத்

தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப் படுகின்றனவா என ஏதேனும் போக்கு வரத்து வாகனத்தினுள் உட்புகலாம்;

(ஆ) அத்தகைய வாகனத்தின் சாரதியினால் விடயத்திற்கேற்ப, பிரிவு *34* அல்லது பிரிவு *34*ஆ வின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழை அல்லது அவ்வாகனம் தொடர்பில் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கு மாறு தேவைப்படுத்தலாம்; அல்லது

(இ) அத்தகைய சான்றிதழை, வேறு ஆவணத்தை அல்லது அதன் பிரதியைக் கட்டுக்காப்பில் எடுக்க லாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் ஏதேனும் பணிப்பு, கட்டளை அல்லது முடிபினால் இன்னலுற் றிருக்கின்ற எவரேனும் ஆள் எந்த தேதியன்று அத்தகைய பணிப்பு, கட்டளை அல்லது முடிபு அத்தகைய இன்னலுற்ற ஆளுக்கு அறிவிக்கப் படுகின்றதோ அந்தத் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அமைச்சரின் அமைச்சுச் செயலாள ருக்கு மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம்.

(4) இச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், (3) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் மேன்முறை யீட்டுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"தண்டங்களை விதித்தல்

39அ. (1) பிரிவு 38ஈ வின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் எவரேனும் போக்குவரத்துச் சேவை வழங்குநர் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது பயணிகளின் தாக்கத்தையும் மற்றும் அறிவித்தலொன்றையும் இயைபான இணங்கியொழுகாமைக்கான தன்மையையும் அளவையும் கவனத்திற்கெடுத்த பின்னர் அத்தகைய விதிப்பனவுக்கான காரணங்களை குறித்துரைத்து விதிக்கப்படவேண்டிய தண்டத்தை போக்குவரத்து சேவை வழங்குநருக்கு அறிவித்தல் வேண்டும். ஆணைக்குழுவானது அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இருபத்தியொரு நாட்கள் எனும் காலத்தினுள் நேரடியாக அல்லது எழுத்து மூலமாக முறையீடுகளை செய்வதற்கு அத்தகைய சேவை வழங்குநருக்கு சந்தர்ப்பத்தை அளித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறுவதன்மீது, ஆணைக்குழு முடிபொன்றை ஆக்குதல் வேண்டும் என்பதுடன் கைப்பட எழுதிய சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் போக்குவரத்துச் சேவை வழங்குநருக்கு அறிவித்தலும் வேண்டும். அத்தகைய சான்றிதழானது விடயத்திற்கேற்ப, ஒவ்வொரு இணங்கியொழுகாமைக்காக ஒரு இலட்சம் ரூபா ஏனும் தொகையை விஞ்சாது இருக்க வேண்டியதான தண்டம் ஒன்றைக் குறித்துரைக்கலாம் அல்லது தண்டத்திலிருந்து அத்தகைய சேவை வழங்குநரை விலக்களிக்கலாம்.

(3) போக்குவரத்து சேவை வழங்குநர் முன்னைய நிகழ்வொன்றின்மீது தண்டமொன்றிற்கு உட்பட்டு இருந்துள்ளவிடத்தும் 38ஈ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரை ஒன்றிற்கு அடுத்துப் பின்னர் இசைந்தொழுக தவறியுள்ளவிடத்தும்

அத்தகைய ஆள் (2) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்படக்கூடியதான தண்டத்திற்கு மேலதிக மாக இரண்டாவது முறையாகவும் அடுத்துறுவ தாகவும் இணங்கியொழுகாமை எனும் நிகழ்வுகளில் தண்டம் ஒன்றாக விதிக்கப்பட்ட தொகையின் இரண்டு மடங்கை கொண்ட மேலதிக தண்டமொன் றின் கொடுப்பனவொன்றுக்கு ஆளாதலும் வேண் டும்.

(4) ஆணைக்குழுவானது இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டம் ஒன்றினை சேகரிப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் பிரிவு 38ஈ வின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளின் இணங்கி யொழுகாமையின் காரணத்தினால் பாதிக்கப்பட்ட இன்னலுற்ற ஆளுக்கு செலுத்தப்படற்பாலதாக ஏதேனுமிருப்பின், நட்டஈடாக சேகரிக்கப்பட்ட அத்தகைய பணத்தொகையை கழித்த பின்னர் ஆணைக்குழுவின் நிதியத்திற்கு வரவு வைக்கப் படுதல் வேண்டும்.

(5) (அ) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தண்டம் ஒன்றிற்கு ஆளாகியுள்ள போக்குவரத்து சேவை வழங்குநர் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய தண்டத்தை செலுத்துவதற்கு தவறியிருப்பின், ஆணைக்குழுவானது நீதிவான் நீதிமன்றம் அதனது சாதாரண நியாயாதிக்கத்தினைப் பிர யோகிக்கையில் விதிக்கக்கூடியதான குற்றப்பணத் தொகை அத்தகைய தொகை விஞ்சலாம் என்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக அதே முறையில் அறவிடப்படவேண்டிய தண்டப்பணக் கொடுப்பனவை தேவைப்படுத்துகின்ற கட்டளை

ஒன்றுக்காக கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு மறுதிறத்தவர் இல்லா விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(ஆ) போக்குவரத்து சேவை வழங்குநர் ஆறு பஞ்சாங்க மாதங்கள் எனும் காலப்பகுதி ஒன்றினுள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளுக்காக தண்டம் ஒன்றிற்கு ஆளாகி இருப்பின், நீதிவான் மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கு இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட அவரது அனுமதிப்பத்திரத்தின் இடைநிறுத்துகைக்கு கட்டளை ஆக்கலாம்.

(6) இப்பிரிவின்கீழான தண்டம் ஒன்றின் விதிப்பனவானது அந்தந்த போக்குவரத்து சேவையை நிறைவேற்றுவதிலிருந்து அல்லது அத்தகைய சேவையை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குவதிலிருந்து அத்தகைய போக்குவரத்து சேவை வழங்குநரை இடைநிறுத்துவதற்கு உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாத இயைபான ஒழுங்குபடுத்தும் அல்லது நியதிச்சட்டக் குழுவை வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளை எடுப்பதிலிருந்து தடைசெய்தலாகாது.

(7) (அ) இப்பிரிவின்கீழ் நிருவாக தண்டம் ஒன்றை விதிப்பதன்மூலம் இன்னலுற்றிருக்கின்றவரான எவரேனும் போக்குவரத்து சேவை வழங்குநர் எந்தத் தேதியன்று அத்தகைய நிருவாகத் தண்டம் அத்தகைய இடருற்ற ஆளுக்கு அறிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு ஒன்றை முன் வைக்கலாம்.

(ஆ) இச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் (அ) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் மேன்முறையீட்டுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவானது, "இருநூறாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு என்பதிலிருந்து பத்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான மறியற்றண்டனைக்கு" வரையுமான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும்:-

"இருநூற்றி ஐம்பதாயிரம் ரூபாவிற்கு குறையாததும் ஐந்நூறாயிரம் ரூபாவை விஞ்சாததுமான ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஊ) என்னும் பந்தியில் "சமர்ப்பித்தல்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமர்ப்பித்தல்;"; என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஊ) என்னும் பந்தியினை உடனடுத்து பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(எ) போக்குவரத்து சேவைகளைப் பதிவுசெய்தல்;

(ஏ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழை, அனுமதிப்பத்திரத்தை அல்லது வேறு ஆவணத்தை வழங்குதல், மதிப்பாய்வு செய்தல், கைமாற்றுதல், புதுப்பித்தல், காலநீடிப்புச் செய்தல்

தொடர்பான நடவடிக்கைமுறை, நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஏதேனும் சான்றிதழுக்கு, அனுமதிப்பத்திரத்திற்கு அல்லது வேறு ஆவணத்திற்கு செய்யப்பட்ட ஏதேனும் மாற்றம்;

(ஐ) மார்க்க அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்படுவதற்கு விண்ணப்பகாரர்களை தெரிவுசெய்யும் கட்டளைக்கல் மற்றும் தெரிவுசெய்தல் செயல்முறை;

(ஒ) இச்சட்டத்தின் கீழ் அறவீடுசெய்யப்பட வேண்டிய கட்டணங்களும் விதிப்பனவு களும்;

(ஓ) போக்குவரத்து சேவை வழங்குநர்களினால் பேணப்படவேண்டிய போக்குவரத்து சேவைகளின் வகுப்புகளை வகுதிப்படுத்தல், சேவை நியமங்கள் அத்துடன் அந்தந்த போக்குவரத்து வாகனங்களின் வெவ்வேறு கட்டணங்களை தீர்மானிக்கும்முறை மற்றும் நிபந்தனைகள்;

(ஔ) காப்பான வினைத்திறன்மிக்க மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட போக்குவரத்துச் சேவை ஒன்றிற்கு வசதியளிப்பதற்கு ஆணைக்குழுவினால் பேணப்படவேண்டிய ஏதேனும் தரவுத்தளத்தின் வினைத் திறன்மிக்க நடைமுறைப்படுத்துகைக்கான வழிகாட்டுநெறிகள்;

(க) கட்டணங்களை விதிப்பனவு செய்வதற்கும் உலகளாவிய நிலைப்படுத்தல் அமைப்பு (GPS) என்பவற்றுக்கான இலத்திரனியல் வழிகளைப் பயன்படுத்துவது தொடர்பான நியமங்கள் மற்றும் நிபந்தனைகள் உட்பட புதிய சேவைகளின் பெறுகை;

(ங) பயிற்சி நிலையத்தின் முகாமை;

(ச) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒருவரினால் பேணப்படவேண்டிய சேவைகளின் நியமங்களும் ஆணைக்குழுவினால் அத்தகைய நியமங்களை கண்காணித்தலும்;

(ஞ) போக்குவரத்து சேவைகள் தொடர்பில் ஏற்புடையற்பாலதான நடத்தைக் கோவைகள் மற்றும் அத்தகைய ஏதேனும் நடத்தை கோவைகளை மீறும் பட்சத்தில் ஆணைக் குழுவினால் நடாத்தப்படும் விசாரணை பற்றிய நடவடிக்கைமுறை;

(ட) வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சான்றிதழ்களின் சோதனை தொடர்பான நிபந்தனைகள்; அத்துடன்

(ண) வசுவண்டி சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் தொடர்பிலான ஆசனங்களின் ஒதுக்கீட்டு முறை மற்றும் விதம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஏ என்னும் பிரிவினைத் திருத்துதல்

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஏ என்னும் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில், "அதன் ஏற்றுதிறன் நாற்பது ஆசனங்களுக்குக் குறையாததான பஸ்வண்டியொன்று தொடர்பாக மாத்திரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் ஏற்றுதிறன் நாற்பது ஆசனங்களுக்குக் குறையாததான பஸ் வண்டியொன்று தொடர்பாகவும் மற்றும் இருபது ஆசனங்களுக்கு குறையாததான குளிரூட்டப்பட்ட வசுவண்டி தொடர்பாகவும் மாத்திரம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "மக்கள் மயப்படுத்தப்பட்ட கம்பெனி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

""விதித்துரைக்கப்பட்ட" என்பது, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

"மாகாணம்" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பிற்கான எட்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மாகாணம் ஒன்று எனப் பொருள்படும்;

"மாகாணசபை" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணசபை ஒன்று எனப் பொருள்படும்;";

(2) "குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "எனப் பொருளாகும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "எனப் பொருளாகும்;"; என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) "குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை சேர்ப்பதன் மூலமும்:-

""போக்குவரத்து கட்டணங்கள்" என்பது, போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்கு விதிக்கப்பட்ட கட்டணம் ஒன்றை அல்லது வாடகையை உள்ளடக்குகின்றது;

"போக்குவரத்துச் சேவைகள்" என்பது வேறு ஏதேனும் இயந்திரமயப்படுத்தப்பட்ட அல்லது இயந்திரமயப்படுத்தப்படாத வேறேதேனும் வகையினதான போக்குவரத்துச் சேவையை உட்படுத்துகின்ற அழைப்புச் சேவையை அல்லது சுயாதீனச் சேவை உட்பட அலுவலகப் போக்குவரத்துச் சேவைகள், பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகள், அழைக்கும் சேவையொன்று உட்பட்ட முச்சக்கரவண்டிச் சேவைகளைப் பயன் படுத்தி மாகாணங்களுக்கிடையே பயணிக் கின்ற பயணிகளுக்காவும் மற்றும் மாகாணங் களுக்கிடையே பண்டங்களைக்கொண்டு செல்வதற்காகவும் கட்டணமொன்றை விதிப்ப தன் மூலம் பயணவசதிகளை வழங்குதல் எனப் பொருள்படும்;

"போக்குவரத்து வாகனம்" என்பது, மாகாணங் களுக்கிடையிலான வீதிப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்தும் பயணிகளை யும் பண்டங்களையும் ஏற்றிச்செல்வதற்காக அமைக்கப்பட்ட ஏதேனும் வாகனம் அத்துடன் இது வசுவண்டியையும் உள்ளடக்குகின்றது;

"வாகனம்" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

**27.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*